(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-09

வினாத்தாள் - I

சுட்டெண்:- .....

நேரம் :- 1 மணித்தியாலம்

- பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
  - உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
  - இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
  - ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
  - செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

(01) 1 இலிருந்து 6 வரை இலக்கங்கள் இடப்பட்டுள்ள தாயக்கட்டை ஒன்றை மூன்று திசைகளிலிருந்து பார்க்கும்போது தென்படும் முறைகளைக் கீழுள்ள உருக்கள் காட்டுகின்றன. அவ் 1, 2, 3 ஆகிய உருக்கள் வரையப்பட்டுள்ளது ஏதோவொரு கோலத்திற்கேற்பவாகும். அதன்படி, அடுத்து வரவேண்டிய உரு,




உரு 1 உரு 2 உரு 3

(1) 

(2) 

(3) 


(02) 

இத்தின்மம் ஒரேயளவான சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தின்மத்தைச் சதுரமுகியாகப் பூரணப்படுத்துவதற்கு இன்னும் தேவைப்படும் சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 19 (2) 16 (3) 21

(03) ஜூலை மாதத்தின் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனின், ஜூலை மாதத்தின் 1 ஆம் திகதி,

(1) வெள்ளிக்கிழமை (2) புதன்கிழமை (3) வியாழக்கிழமை

(04) 

உரு 1 உரு 2 உரு 3

அருகே 1, 2 ஆகிய உருக்களில் எண்கள் ஏதோவொரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, 3 ஆவது உருவின் வெற்றுவட்டத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.


(1) 

(2) 

(3) 

(05) ஒரு பாத்திரத்தினுள் 1/ 500ml நீர் உள்ளது. அப்பாத்திரத்திலுள்ள சிறிய துவாரம் ஒன்றின் ஊடாக 1 மணித்தியாலத்திற்கு 250ml நீர் கசிந்து வெளியேறுகிறது. அதன்படி, அப்பாத்திரத்திலிருக்கும் நீர் முழுவதும் வெளியேற எடுக்கும் காலம்,

(1) 4 மணித்தியாலங்கள் (2) 8 மணித்தியாலங்கள் (3) 6 மணித்தியாலங்கள்


(06) 

இவ்வுருவின்படி, F எனும் எழுத்துக்குப் பொருத்தமான எண்,

(1) 24
(2) 20
(3) 18

(07) பின்வரும் பழங்களின் விலைகளைப் பரிசீலித்துப் பார்க்குக.

 → ரூபா 40.00

 → ரூபா 80.00

 → ரூபா 100.00

மேற்படி விலைகளின்படி, தோடம்பழமொன்றின் விலை,

(1) ரூபா 30.00 (2) ரூபா 20.00 (3) ரூபா 40.00

08) பாத்திமாவின் தற்போதைய வயது 12 வருடங்கள் ஆகும். அவளுடைய தாயாரின் தற்போதைய வயது பாத்திமாவின் வயதின் மூன்று மடங்கிலும் பார்க்க 7 வருடங்கள் அதிகமாகும். அதன்படி, இருவரினதும் தற்போதைய வயதுகளின் கூட்டுத்தொகை,

(1) 52 வருடங்கள் (2) 58 வருடங்கள் (3) 55 வருடங்கள்

www.ikedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom Online வகுப்புக்கள்

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்





ICT

Maths **English**


Tamil **History**

Science

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

Contact

76667-4945


(09) 

இவ்வுரு ஒரேயளவான சிறிய சதுர வடிவக் கூண்டுகளினால் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வுருவில் காணக்கிடைக்கும் மிகப்பெரிய செவ்வக வடிவத்திலுள்ள சிறிய சதுர வடிவக் கூண்டுகளின் எண்ணிக்கை,


(1) 30 (2) 35 (3) 32

(10) ஒரு வரிசையில் பத்மாவிற்கு முன்னால் 7 பிள்ளைகளும், பத்மாவிற்குப் பின்னால் 11 பிள்ளைகளும் நின்றனர். அதன்படி வரிசையில் சரிநடுவே நிற்பது வரிசையின் முதலாவதிலிருந்து எத்தனையாவது பிள்ளை?

(1) 9 ஆவது பிள்ளை (2) 10 ஆவது பிள்ளை (3) 11 ஆவது பிள்ளை

(11) 


இக்கடதாசியைப் புள்ளிக்கோட்டின் வழியே இரண்டாக மடித்த பின் காணக்கூடிய முறை,

(1)  (2)  (3) 

(12) 

இவ்வுரு வரிசையில் உருக்கள் ஏதோவொரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றிடத்திற்கு வரவேண்டிய உரு,

(1)  (2)  (3) 

(13) 

உருவிலுள்ள சதுர வடிவான கடதாசியிலிருந்து வெட்டி எடுக்கக்கூடிய நிழற்றப்பட்டுள்ள முறையிலான வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 10 (2) 8 (3) 12


(14) அனில் சிவாவை விட வயதில் மூத்தவன். ஆசிம் சிவாவை விட வயதில் இளையவன். நசீர் அனிலை விட வயதில் மூத்தவன். அதன்படி, ஒவ்வொரு பிள்ளையினதும் வயது கூடிச்செல்லும் ஒழுங்கிற்கேற்ப அவர்களின் பெயர்களை வரிசைப்படுத்தினால் கிடைப்பது,

(1) நசீர் , அனில் , சிவா , ஆசிம் (2) ஆசிம் , அனில் , சிவா , நசீர் (3) ஆசிம் , சிவா , அனில் , நசீ

(15) கணேஷ் தனது வீட்டிலிருந்து மேற்குத் திசைக்கு 600m தூரம் சென்று தன்னுடைய வலது கைப்பக்கத்திற்குத் திரும்பி 600m தூரத்திலுள்ள பாடசாலையை அடைந்தான். அதன்படி, கணேஷின் வீடு இருப்பது பாடசாலைக்கு,


(1) தென்கிழக்குத் திசையில் (2) வடமேற்குத் திசையில் (3) கிழக்குத் திசையில்

(16) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு உருவிற்கும் 10 இற்கும் குறைந்த எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, ○ இவ்வுருவிற்கு வழங்கப்பட்டுள்ள எண்ணாக இருக்கக்கூடியது,

(1) 3 (2) 1 (3) 2

(17) 

மேற்படி, மூன்று அட்டைகளிலும் உள்ள பின்னங்களை ஏறுவரிசைப்படி வைத்தால் உருக்கள் அமையும் ஒழுங்கு,

(1) ○△□ (2) □○△ (3) △○□

(18) A பெட்டியில் 8 பந்துகளும், B பெட்டியில் 7 பந்துகளும் உள்ளன. பிள்ளையொன்று A பெட்டியிலிருந்து 3 பந்துகளை B பெட்டிக்கும், B பெட்டியிலிருந்து 4 பந்துகளை A பெட்டிக்கும் இட்டது. தற்போது A, B பெட்டிகளில் உள்ள பந்துகளின் எண்ணிக்கைகள் ஒழுங்குமுறையே,

(1) A = 9, B = 6 (2) A = 12, B = 10 (3) A = 10, B = 5

(19) முதலில் தரப்பட்டுள்ள உருவைச் சரியாகப் பூர்த்தி செய்ய இணைக்க வேண்டிய உருவத்துண்டு,




(1)  (2)  (3) 

www.ikeou.lk

(20) பரானாவின் வயது 7 வருடங்கள் ஆகும். அவளது தாயின் வயது பரானாவின் வயதின் 5 மடங்காகும். பரானாவின் தாயை விடத் தந்தை 4 வருடங்கள் மூத்தவர். அதன்படி, பரானாவின் தந்தையின் வயது,


(1) 37 வருடங்கள் (2) 39 வருடங்கள் (3) 42 வருடங்கள்

(21) 

இத்திண்மத்திலுள்ள முகங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 7 (2) 9 (3) 8


(22) கீழே வட்டங்களினுள் எண்கள் எழுதப்பட்டுள்ளது ஏதோவொரு கோலத்திற்கேற்பவாகும்.





அதன்படி, A, B ஆகிய வட்டங்களுக்குப் பொருத்தமான எண்கள் முறையே,

(1) A = 2 , B = 4 (2) A = 3 , B = 5 (3) A = 4 , B = 6

*** பின்வரும் கட்டத்தினுள் குறிக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு இலக்கம் (23), (24) ஆகிய வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிந்து கோடிடுக.**



(23) அறிவித்தல் ஒன்றைக் காட்டும் குறியீட்டு வரிசையைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 


(24) கட்டளை ஒன்றைக் காட்டும் குறியீட்டு வரிசையைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(25) நிற்பது, சத்தம், உடும்பு, எறும்பு

மேலே தரப்பட்டுள்ள நான்கு சொற்களிலும் உள்ள ஒவ்வொரு எழுத்தைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட சொல்,

(1) கறுப்பு (2) உற்சவம் (3) எடுத்து

(26)  , ,

மேற்படி தொடர்புகளின்படி,  இவ்வுருவின் எண்ணிக்கையாக இருக்கக்கூடியது,

(1) 12 (2) 16 (3) 24

(27) தாயக்கட்டையொன்றின் மூன்று பக்கங்களின் தோற்றங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.



இந்தத் தாயக்கட்டையில்  இம்முகத்திற்கு எதிர்முகமாக இருப்பது,

(1)  (2)  (3) 

(28) E F B C D B C A F B G E D B C B A

மேலேயுள்ள ஆங்கில எழுத்துக்களின் வரிசையில் ஒரு தடவை மாத்திரம் எழுதப்பட்டுள்ள ஆங்கில எழுத்து,

(1) G (2) A (3) F

www.lkedu.lk

(29) ஐந்து நாட்களிலும் பாடசாலை நடைபெறும் ஒரு வாரத்தில் அடுத்தடுத்து வரும் மூன்று நாட்களில் சமன் பாடசாலைக்குச் சென்றான். அதன்படி, அவன் நிச்சயமாகப் பாடசாலைக்குச் சென்ற நாளாக இருக்கக்கூடியது,

(1) திங்கட்கிழமை (2) வியாழக்கிழமை (3) புதன்கிழமை


(30) குறித்த புத்தகமொன்றில் 96 பக்கங்கள் உள்ளன. பிள்ளையொன்று அப்புத்தகத்தில் 34 ஆவது பக்கத்திலிருந்து 79 ஆவது பக்கம் வரை வாசித்துள்ளது. அதன்படி, அப்பிள்ளை அப்புத்தகத்தில் வாசிக்காத பக்கங்களின் மொத்த எண்ணிக்கை,


(1) 51 (2) 50 (3) 52


(31) நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை எனின், நேற்று முன்தினம்,

(1) செவ்வாய்க்கிழமை (2) வியாழக்கிழமை (3) புதன்கிழமை

(32) 3 சதுரங்களையும், 2 வட்டங்களையும், 4 முக்கோணங்களையும் பயன்படுத்தி அமைக்கப்பட்ட உரு,

(1) 

(2) 

(3) 

(33) 756 , 675 , 567 , 657 , 765 தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசைப்படுத்தும்போது நடுவில் வரும் எண்,

(1) 657 (2) 675 (3) 756

(34) XIX XI IV ஆகிய உரோம எண்குறிகளை முகம் பார்க்கும் கண்ணாடியின் ஊடாகப் பார்க்கும்போது பெறுமதி கூடிக் காணப்படும் உரோம எண்குறி,

(1) IV (2) XI (3) XIX

(35) பின்வரும் A, B, C ஆகிய சந்தர்ப்பங்களில் உருக்கள் வரையப்பட்டுள்ள கோலத்தின்படி, D சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான உருக்கள்,



A சந்தர்ப்பம்




B சந்தர்ப்பம்



C சந்தர்ப்பம்

..... D சந்தர்ப்பம்

(1)  (2)  (3) 

(36) 120cm நீளமான கம்பியொன்றை மூன்று சம துண்டுகளாக வெட்டி ஒரு துண்டில் ஒரு சதுரம் அமைக்கப்பட்டது. அதன்படி, அமைக்கப்பட்ட சதுரத்தின் ஒருபக்க நீளம்,

(1) 10cm (2) 20cm (3) 15cm

(37) "உதவி செய்தல்" எனும் கருத்தைத் தரும் மரபுத்தொடர்,

(1) வாய் காட்டுதல் (2) உச்சி குளிருதல் (3) தோள் கொடுத்தல்

(38) வைத்தியசாலையில் அதிகமாக இருப்பவர்கள்,

(1) வைத்தியர்கள் (2) நோயாளர்கள் (3) தாதியர்கள்

(39) இரண்டு இலக்கங்களை ஒன்றையொன்று பெருக்கும்போது வரும் விடை 18 ஆகும். அதன்படி, அவ்விரு இலக்கங்களின் கூட்டுத்தொகையாக இருக்க முடியாதது,

(1) 12 (2) 11 (3) 9

(40) 50 தொடக்கம் 102 வரையான இலக்கங்களை எழுதும்போது பூச்சியம் எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 10 (2) 8 (3) 9

www.ikeduk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-09

வினாத்தாள் - II

சுட்டெண் :- .....

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.

* **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
* **இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.**
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* **விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* **விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* **செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.

ஒரு கிராமத்தின் பெருமை அக்கிராமத்திலுள்ள பாடசாலையில் தங்கியுள்ளது. பாடசாலையின் பெருமை அங்கு கல்வி பயிலும் மாணவர்களில் தங்கியுள்ளது. எனவே பாடசாலையின் சொத்துக்களை நாங்கள் பேணிப் பாதுகாப்பதுடன், எமது எதிர்கால சந்ததியினர் பயன்படுத்தக் கூடியவாறு "கண்ணை இமை காப்பது போல" பக்குவமாகப் பேணிப் பாதுகாப்போம்.

(i) "சிறுமை" என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக. .....

(ii) பந்தியிலுள்ள உவமைத் தொடரை இனங்கண்டு எழுதுக. .....

(iii) "கிராமத்தின்" என்பதன் பன்மை வடிவினை எழுதுக. .....

(iv) உயர்திணை எதிர்கால பன்மை வினைச்சொல்லை எழுதுக. .....

(v) "கவனமாக" என்ற கருத்தைத் தரும் சொல் எது? .....

02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திலுள்ள நிறுத்தற் குறியீடுகளின் பெயர்களை எழுதுக.

"கணிதம், ஆங்கிலம், சுற்றாடல் ஆகிய புத்தகங்களைக் கொண்டு வந்தீர்களா?" என ஆசிரியர் கேட்டார்.

(i) ..... (ii) ..... (iii) ..... (iv) .....

03) கீழே தரப்பட்டுள்ள இறந்தகால வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

நான் ஒரு கவிதை எழுதினேன். :- .....

04) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திற்கு எழுவாய் அடைமொழி சேர்த்து வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

கூட்டில் இருந்த கிளி பறந்து சென்றது. :- .....

05) பின்வரும் ஆண்பால் வாக்கியத்தைப் பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

மருத்துவன் நோயாளியைக் கவனித்தான். :- .....

06) கீழே வினவப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) உயிர் எழுத்துகளில் உள்ள குறில் எழுத்துகளின் எண்ணிக்கை யாது? (1. ஏழு 2. ஐந்து 3. எட்டு)

(ii) ஆய்த எழுத்து யாது? (1. க் 2. ஞ் 3. ∴)

07) கீழே வினவப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) உயர்திணை படர்க்கை பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக. .....

(ii) உயர்திணை முன்னிலை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக. .....

08) பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துகளால் காட்டப்பட்டுள்ள உவமைத் தொடர்கள் உணர்த்தும் கருத்தினை எழுதுக.

(i) தேவா மைதானத்திற்கு **அத்தி பூத்தாற் போல** வருவான். :- .....

(ii) குழந்தையிடம் கொடுத்த பொருளை திரும்ப எடுப்பது **கல்லில் நார் உரிப்பது போல** என்று அம்மா சொன்னார்.

.....

09) பின்வரும் வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.

மாணவர்கள் ஆசிரியருடன் வகுப்பறையிலேயே இருந்தனர். :- .....

10) (i) கீழே தரப்பட்டுள்ள கருத்துக்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

சிறுவயதில் கற்பவை மனதில் நன்றாகப் பதியும். :- .....

(ii) கீழே தரப்பட்டுள்ள பழமொழியின் கருத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். :- .....

www.ikeotuk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

(11) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான விடையைப் பூர்த்தி செய்க.

(i) Where is Ravi ? ..... canteen.

(ii) Where do you live ? ..... Jaffna.

(12) பின்வரும் ஆங்கில எழுத்துகளை ஒழுங்குபடுத்தி ஆங்கிலச் சொற்களாக்குக.

(i) i / h / f / s :- ..... (ii) l / m / k / i :- .....

(13) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.


(i) This is ..... (a / an) elephant. (ii) I am ..... (reading / read) a book.

(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.


பொ(த்)த தியெனவா :- .....

(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழ் எழுத்துகளில் எழுதுக.

நேரம் என்ன? :- .....

(16)  இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? .....


(17) I , V , IX , XIII , ☐ இவ்வெண்கோலத்தில் அடுத்து வரும் எண்ணை வெற்றுக்கூண்டினுள்ளேயே எழுதுக.

(18) 

தராசு சமநிலையை அடைவதற்கு A பக்கத்திற்கு இன்னும் எத்தனை கிராம் சேர்க்கப்பட வேண்டும்? .....

(19) கங்கா சமய பாடத்தை 1 மணித்தியாலம் 40 நிமிடங்களும், சுற்றாடல் பாடத்தை 50 நிமிடங்களும் படித்தாள்.

அதன்படி, அவள் படித்த மொத்த நேரத்தை மணித்தியாலம், நிமிடங்களில் எழுதுக. .....

(20) 

இவ்வுருவில் A, B, C, D ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள திசைகளை எழுதுக.

(i) A :- ..... (ii) B :- .....

(iii) C :- ..... (iv) D :- .....

(21) (i) 10 மாம்பழங்களுள் 0.3 முழுமையாகப் பழுத்த மாம்பழங்கள் ஆகும். அதன்படி, அங்கு முழுமையாகப் பழுக்காது இருந்த மாம்பழங்களின் எண்ணிக்கையைச் சாதாரண பின்னத்தில் எழுதுக. .....

(ii) 16 பந்துகளின் நான்கில் மூன்று பங்கில் எத்தனை பந்துகள் உண்டு? .....

(22) ஒரு பிள்ளை 12km 400m தூரத்தைப் பேருந்திலும், 2km 600m தூரத்தை நடந்தும் பயணித்தது. அதன்படி, அப்பிள்ளை நடந்து பயணித்த தூரத்தை விடப் பேருந்தில் பயணித்த தூரம் எவ்வளவு கூடியது? .....

(23) பென்சிலொன்றின் விலை ரூபா 6.25 ஆகும். பேனையொன்றின் விலை ரூபா 24.75 ஆகும். 2 பென்சில்களையும், 1 பேனையையும் வாங்கிய பின் வியாபாரிக்குக் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு? .....


(24) (i)

9		2
	8	
4		6

இக்கட்டத்திலுள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி ஆக்கக்கூடிய 5 இலக்கங்களைக் கொண்ட மிகப்பெரிய எண்ணைச் சொற்களில் எழுதுக.

.....

(ii) பத்தினிடத்தில் 7, ஒன்றினிடத்தில் 2, நூறினிடத்தில் 0, பத்தாயிரத்தினிடத்தில் 6, ஆயிரத்தினிடத்தில் 3 ஆகவுள்ள எண்ணை எழுதுக. .....

(25) 

பாடசாலை ஒன்றின் தரம் 5A, 5B ஆகிய வகுப்புகளில் கல்வி பயிலும் ஆண், பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைகளை இவ்வரைபு காட்டுகின்றது. அதன்படி, கீழே வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக.

(i) 5A வகுப்பிலுள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது? .....


(ii) இரு வகுப்புகளிலும் உள்ள ஆண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது? .....

www.ikeou.lk

(26) (i) உருளை ஒன்றிலுள்ள வளைந்த விளிம்புகளின் எண்ணிக்கை யாது? .....

(ii) கோளம் ஒன்றைச் சரிபாதியாக வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம் யாது? .....

(27)  இவ்வுருவின் சமச்சீர் அச்சுகளை வரைந்து காட்டுக.

(28)  இவ்வுருவிலுள்ள செங்கோணத்திலும் குறைந்த கோணங்களின் எண்ணிக்கை யாது?

.....

(29) (i) 2kg மாவின் விலை ரூபா 160.00 எனின், 1kg 500g மாவின் விலை யாது? .....

(ii) பேனையொன்றின் விலை ரூபா 12.00 ஆகும். பிள்ளையொன்று 6 பேனைகளைக் கொள்வனவு செய்து வியாபாரிக்கு ரூபா 100.00 நாணயத் தாளொன்றைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் யாது? .....

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) ஆறு கால்களை உடைய பிராணி,

(1) இறால் (2) உண்ணி (3) வெட்டுக்கிளி

(31) தனது சொண்டினால் மரத்தண்டுகளில் பொந்துகளை அமைத்துத் தனது இருப்பிடத்தை அமைத்துக்கொள்ளும் பறவை,

(1) மரங்கொத்தி (2) பருந்து (3) செண்பகம்

(32) கிராமிய விளையாட்டு ஒன்றல்லாதது,

(1) சடுகுடு (2) சதுரங்கம் (3) கிளித்தட்டு

(33) வீட்டில் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி இருக்கும்போது செய்யக்கூடாத செயல்,

(1) நோயாளி பயன்படுத்தும் பீங்கான், கோப்பைகள், துவாய் போன்றவற்றை வேறாக்கி வைத்தல்.

(2) நோயாளியைத் தனியான அறையில் வைத்தல்.

(3) வீட்டிற்கு வரும் விருந்தாளிகளுக்கு வீட்டில் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளி இருப்பதை தெரியப்படுத்தாதிருத்தல்.

(34) "சூரியக் கிரகணம்" ஒன்றை நாம் பார்க்க வேண்டியது,

(1) பிளாஸ்டிக் குழாய் ஊடாக (2) நீர் நிரப்பப்பட்ட பாத்திரமொன்றினுள் (3) நேரடியாக சூரியனைப் பார்ப்பதன் மூலம்

(35) பாதங்களில் குளம்புகளைக் கொண்ட பிராணிகள்,

(1) குதிரை, எருது (2) யானை, புலி (3) கரடி, முயல்

(36) "விக்டோரியா" எனப்படுவது,

(1) இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி (2) இலங்கையின் மிக உயரமான மலை

(3) இலங்கையின் மிக உயரமான அணைக்கட்டு

(37) "முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை ஒன்று உண்டு" என்பதைத் தெரிவிக்கும் வீதிச் சமிக்ஞை,

(1)  (2)  (3) 

(38) கிராம சேவகர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சேவை ஒன்றல்லாதது,

(1) வதிவிடத்தை உறுதிப்படுத்தல். (2) நன்நடத்தைச் சான்றிதழ் பெறல். (3) வாகன அனுமதிப் பத்திரம் பெறல்.

(39) கீழே காட்டப்பட்டுள்ள பிராணிகளில் பச்சை நிற உடலைக் கொண்டிராத பிராணி,

(1)  (2)  (3) 

(40) கையினாலும், தடியினாலும் இசைக்கப்படும் ஒரு சங்கீத உபகரணம்,

(1) உடுக்கை (2) தவில் (3) தம்பட்டம்


(41) முகத்தின் இரு பக்கங்களிலும் அல்லாது முகத்தின் முன்னே கண்கள் அமைந்துள்ள பறவை,

(1) ஆந்தை (2) கொக்கு (3) கழுகு

(42) பாலைப் பெற்றுக்கொள்வதற்காக வளர்க்கப்படும் தாவரம்,

(1) பப்பாசி (2) இறப்பர் (3) தூரியன்

(43) பின்வருவனவற்றில் கடலாமை காட்டப்பட்டுள்ள உரு,

(1)  (2)  (3) 

(44) இலங்கையின் தேசிய மரம் காட்டப்பட்டுள்ள உரு,

(1)  (2)  (3) 

(45) கட்டாயமாக இருவரிற்கு மாத்திரம் விளையாடக்கூடிய விளையாட்டு,

(1) மேசைப்பந்து (2) சதுரங்கம் (3) கரம்

(46) இரவு நேரங்களில் பூக்காத பூவொன்று,

(1) சூரியகாந்தி (2) கடுபுல் (3) மல்லிகை

(47) வௌவாலின் மூலம் கிடைக்கும் நன்மையொன்று,

(1) சுற்றாடலைத் தூய்மையாக்கும். (2) வித்துப் பரம்பலுக்கு உதவும்.

(3) பயிர்களுக்குத் தீங்கு செய்யும் நத்தைகளைப் பிடித்து உண்ணும்.

(48)  இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள இலைகளைக் கொண்ட தாவரம்,

(1) கண்டங்கத்தரி (2) நொச்சி

(3) ஆடாதோடை

(49) உணவுப் பொருட்களைச் சுவையூட்ட மிக அத்தியாவசியமானது,

(1) ரம்பை (2) கறிவேப்பிலை (3) உப்பு

(50) இலங்கை தேசியக் கொடியில் முழுக் கொடியையும் சுற்றிவர இடப்பட்டிருக்கும் மஞ்சள் நிறக் கீலத்தினால் குறிக்கப்படுவது

(1) இரக்கம், காருண்யம், திருப்தி, பற்றின்மை ஆகிய நான்கு பண்புகளையாகும்.

(2) இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையையும் கொடியின் முழுமைப்பாட்டையும் ஆகும்.

(3) இலங்கையில் நான்கு பிரதான இனத்தவர்கள் வாழ்கின்றனர் என்பதையாகும்.

(51)  இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள தையல் வகை,

(1) சங்கிலித் தையல் (2) வெட்டுக்குத்துத் தையல் (3) கம்பளித் தையல்

(52) இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்,

(1) கலாநிதி சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா (2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி (3) கலாசூரி ஆனந்த சமரக்கோன

(53)  பிரதான வீதிகளிலுள்ள ஒளிச் சமிக்ஞைத் தூண்களில் இவ்வுரு காணக்கிடைக்கும். பிரதான பாதையி குறுக்காக நடந்து கடக்க வேண்டியது இவ்வுரு,

(1) சிவப்பு நிறத்தில் ஒளிரும்போது (2) பச்சை நிறத்தில் ஒளிரும்போது

(3) மஞ்சள் நிறத்தில் ஒளிரும்போது

(54) ஒரு நகரத்திலிருந்து மிகத் தொலைவிலுள்ள வேறொரு நகரத்திற்குச் செல்லும்போது, அந்நகரத்திற்குச் செல்வதற்கான மிகவும் குறுகிய தூரத்தைக் கொண்ட பாதையைக் கண்டறிந்து பயணிக்க மிக இலகுவான வழிமுறை,

(1) பிரதான வீதிகளைக் கொண்ட தேசப்படம் ஒன்றைப் பயன்படுத்துதல்.

(2) வீதியில் சந்திக்கக்கூடியவர்களிடம் வழியைக் கேட்டுப் பயணப்படல்.

(3) சூட்டிகைத் தொலைபேசி ஒன்றிலுள்ள Google Map மென்பொருளைப் பயன்படுத்துதல்.

(55) இலங்கையில் விமான நிலையங்கள் அமைந்துள்ள நகரங்கள் அல்லாதவை,

(1) கம்பஹா, புத்தளம் (2) இரத்மலானை, பலாலி (3) கட்டுநாயக்க, மத்தளை

(56)  இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள உடுக்கோளம்,

(1) தென்சிலுவை (2) விருட்சிகம் (3) பெருநாய்

(57) திருகோணமலை நகரிற்கு அருகில் கடலுடன் கலக்கும் நதி,

(1) களனி கங்கை (2) களு கங்கை (3) மகாவலி கங்கை

(58) மண் கழுவிச் செல்லப்படுவதற்கான காரணங்கள்,

(1) மரம் வெட்டுதல், ஆறுகளில் மணல் அகழ்தல். (2) கல் பரப்புதல், புல் வளர்த்தல்.

(3) தேங்காய் உரிமட்டை அடுக்குதல், தாவரங்கள் நடுதல்.

(59) வீட்டிற்கு வருகை தந்து சிறு குழந்தைகளினதும், கர்ப்பிணித் தாய்மார்களினதும் சுகாதாரம் பற்றி ஆராய்பவர்,

(1) பொதுச் சுகாதாரப் பரிசோதகர் (2) குடும்ப சுகாதார சேவையாளர் (3) கிராம சேவகர்

(60) "நான் பார்வையற்ற மனிதரொருவருக்குப் பிரதான வீதியைக் கடக்க உதவி செய்தேன்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

(1) .....

(2) .....

(3) .....

www.ikeou.lk